**2கொரிந்தியர்**

**வாசிக்க: 2கொரிந்தியர் 5:1-21**

இதன் ஆசிரியர் பவுல் ஆவார். தீமோத்தேயுடன் இணைந்து பவுல் எழுதினார். எழுதப்பட்ட காலம் கி.பி 55-57 வரையுள்ள காலத்தில் மக்கதோனியாவிலிருந்து எழுதப்பட்டது. இந்த புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கம் பவுல் தனது அப்போஸ்தல அழைப்பை உறுதியாக தெரிவிப்பதற்காகவும் மற்றும் கள்ளப்போதகர்களின் கருத்துக்களை மறுக்கவும், மனந்திரும்பிய மக்களை மறுபடியும் சபையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த புத்தகம் எழுதப்பட்டது. இந்த நிருபம் கொரிந்து சபை மக்களுக்காகவும், எங்கும் உள்ள விசுவாச மக்களுக்காகவும் எழுதப்பட்டது. இந்நூலின் சிறப்பு பவுல் தன்னுடைய வாழ்வில் அனுபவித்த பாடுகளை விவரிக்கிறது. பவுல் தன்னுடைய மன உளச்சல்களை வெளிப்படையாக அறிக்கையிடுகிறார்.

திறவுகோல் வசனங்கள்: 5:17-21

இப்புத்தகம் எழுதப்பட்ட சூழல் கொரிந்து சபை மக்களுக்கு பவுல் எழுதும் நான்காவது கடிதம்தான் இந்த புத்தகம். கொரிந்து பட்டணத்தில் 18 மாதங்கள் தங்கியிருந்து ஊழியம் செய்து சபையை ஆரம்பித்தார் பவுல். அப்போஸ்தலர் 18:1-18. அதன் பின் கொரிந்துவில் பல கசப்பான அனுபவத்தை பெற்றார். கள்ளபோதகரில் சிலர் கொரிந்து சபை மக்களை தங்கள் தந்திரமான உபதேசத்தினால் தங்கள்வயமாக்கிக் கொண்டார்கள். அவர்களில் சிலர் பவுலை பற்றி குறைவாக மதிப்பிட்டு இருந்தார்கள்.

சிலர் அவரை குற்றம் சாட்டினார்கள். அதை சரிசெய்வதற்காக தீத்து மூலமாக இந்த கடிதத்தை பவுல் கொடுத்து அனுப்புகிறார்.

இப்புத்தகத்தின் மையக்கருத்து நமக்கு வரும் பாடுகள் நன்மைக்கு ஏதுவாகவே இருக்கிறது. அதனால் நாம் ஆறுதல் அடைகிறோம். மற்றவர்களை ஆறுதல் அடைய உதவியாக இருப்போம். 1:3-7. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும் கிறிஸ்துவுக்குள் நிச்சயமாக நிறைவேறும். 1:20. சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது பழிவாங்குதலுக்காக செய்யாமல் திருத்துவதற்காக செய்ய வேண்டும். 2:1-11. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மரணமடைந்தால் கர்த்தரிடத்தில் செல்வார்கள். 5:1-9. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவனுடைய எண்ணங்கள், நோக்கங்கள், சொற்கள், செயல்கள் யாவும் மாறும். 5:17. அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக் கூடாது. 6:14. போன்ற காரியங்கள் இப்புத்தகத்தின் மையக்கருத்தாகும்.

**கேள்விகள்:**

1. கொரிந்து சபை மக்களுக்கு பவுல் எழுதிய கடிதம் எத்தனை?

2. நமக்கு வரும் பாடுகள் எதற்காக?

3. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் என்ன நடக்கும்?